மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

மடத்துக்குளம்

அசல் வழக்கு எண்.104/2019

இன்று 2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08 ம் நாள் இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது பிரிவு ஏற்பாட்டின் படி ) திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துகுமார் (Pw 1) |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | குப்புச்சாமி |
| வயது | : | 37 |
| கிராமம் | : | குமாரமங்கலம் |
| தொழில் | : | விவசாயம் |
| வட்டம் | : | மடத்துக்குளம் |
| மாவட்டம் | : | திருப்பூர் |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வழக்கு விபரம் தெரியும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். வா.சா.ஆ.1– 22.06.1977 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் , வா.சா.ஆ.2– 23.06.1999 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல், வா.சா.ஆ.3– 27.01.2014 தேதியிட்ட பாக விடுதலை ஆவணம் சான்றிட்ட நகல், வா.சா.ஆ.4– 11.02.2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல், வா.சா.ஆ.5– 19.02.2014 தேதியிட்ட 1ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொடண்தற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை, வா.சா.ஆ.6– 17.02.2014 தேதியிட்ட

2ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொடண்தற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம்/–திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்